**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 15–ஆம் நாள், திங்கட்கிழமை

**இ.ம.எண். 3/2025 இன் அ.வ.எண்.254/2015**

**CNR No. TNSA13-000164-2015**

கலியன் . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

செல்வராஜ் . . . எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, 07.08.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சந்தானம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது தாவாவில் திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர்/வாதி எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா வழக்குரையில் மூன்றாவது பக்கத்தில் 7 வது பத்தியில் நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25a என்பதற்கு

பதிலாக 25b என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், தாவா வழக்குரையில் த.நா.நீ.ச.பிரிவு 25b என்பதை நீக்கி 25a என்று திருத்தம் செய்யப்படவில்லை எனில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே மனுவில் கண்டுள்ளபடி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் DW1 ன் சாட்சியமும் 14.03.2025 அன்று முடிவடைந்து விட்டது என்றும், விசாரணை தொடங்குவதற்கு முன்புதான் இவ்வகையான திருத்தத்தைச் செய்ய இயலும் என்றும், ஆனால் மனுதாரர் தனது சாட்சியத்தில் உள்ள இடைவெளியை நிரப்ப மட்டுமே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவானது வழக்கை காலதாமதப்படுத்த வேண்டியே தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் இத்தாவாவை விளம்புகை மற்றும் சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாவாவை தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 25 (b)ன் கீழ் நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளார். வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில் வாதி கோரிய பரிகாரத்தில், தாவா சொத்து வாதிக்கு முழு உரிமையானது என்று விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தின் வடபுறம், பிரதிவாதி ஆக்கிரமித்துள்ள இடத்தை காலி செய்து, அதனை வாதி வசம் ஒப்படைக்க வேண்டி செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும்

கோரப்பட்டுள்ளது. இதன் படி தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் 25(a)ன் கீழ் பரிகாரம் கோருவதே சரியானதாக இருக்கும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 15–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.15 18:36:00 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.15 18:36:10 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 3/2025 இன்
அ.வ. எண். 254/2015
நாள் : 15.09.2025